**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-2 Date : 06.06.2024
Case No. : **O.S.338/2019** Nationality : Indian
Name : முத்துசட்டநாதன் Religion :
(உதவியாளர் சார்பதிவாளர் அலுவலகம் திருவிடைமருதூர்) Age : 45
Father's/Husband's Name :
Village :
Taluk :

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

முதல் விசாரணை

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து திருவிடைமருதூர் சார்பதிவாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் அவரால் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் அளிக்கப்பட்டதின்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 09.02.2015 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண். 355/2015 ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன். ( மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் **சா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) ( மேற்படி ஆவணம் ஏற்கனவே வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) மேற்படி ஆவணத்தில் கண்ட ஏ ஷெடியூலில் கண்ட சொத்துவிவரத்தில் கண்ட சொத்து திருவிடைமருதூர் சார்பதிவக அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்ட பி ஷெடியூலில் கண்ட

சொத்து விவரத்தில் கண்ட சொத்து குத்தாலம் சார்பதிவக அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றால் சரிதான். குத்தாலம் சார்பதிவக அதிகார வாம்பிற்குட்பட்ட பி ஷெடியூல் சொத்து எங்கள் சார்பதிவகத்தில் எந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு சட்டம் பிரிவு 28 ன்படி பதிவு செய்யப்படும் சொத்துக்கள் இரு வேறு சார்பதிவகத்திற்கு உட்பட்ட சொத்துக்களாக இருந்தால் இரண்டில் ஏதாவது ஒரு சார்பதிவகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்பதால் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு வெவ்வேறு சார்பத்திவகத்திற்கு உட்பட்ட சொத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என்றால் முன்கூட்டியே எழுத்துபூர்வமாக அனுமதி பெற வேண்டும் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல பதிவு செய்ய முடியாது என்றாலும் மாவட்ட சார்பதிவாளரிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்றாலும் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் சட்டப்பிரிவு 2002 ம் ஆண்டிற்கு பிறகு நடைமுறையில் இல்லை என்றாலும் பதிவு துறை தலைவரின் சுற்றறிக்கை மூலமாக மேற்படி சட்டப்பிரிவு தடை செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இரு வெவ்வேறு சார்பதிவகத்திற்குட்பட்ட சொத்துக்கள் பதிவு செய்யப்பட்டால் அதைப்பற்றிய விவரங்கள் மற்றொரு சார்பதிவகத்திற்கு தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் விவரங்கள் குறித்து தொடர்புடைய சார்பதிவகத்திற்கு தெரிவிக்கப்பட்டு அங்கு வில்லங்கத்தில் பதிவு செய்யப்படும்.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சா.சா.ஆ.1 ஆவணம் உரிய முத்திரைகட்டணம் பெறப்பட்டு உரிய சட்ட

விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் ஆவண எண்.355/2015 ஆகும்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.